புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol: 08, Issue : Special
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS
March 2025
ISSN: 2456-821X

# 7. TML1146 - பக்தி இயக்க காலத்தில் பெண் சமுதாயம்

சா. மணிமேகலை
உதவிப் பேராசிரியர்
தமிழ் துறை, வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
ஈரோடு.12.

## முன்னுரை

*உலகில் பெண்ணே முதன்மை சிறப்படையவள் மற்ற எல்லாச் சிறப்புகளும் பெண்ணின் சிறப்புகளுக்குப் பின்னது எனலாம். உயிர்களைப் பிறப்பித்தும் பேணிக்காத்தும் பிறருக்கு அன்பு செய்தும் அரும்பெருமை கொண்டவள் பெண் பெண்ணின் பெருமையை மறுக்கும் இடம் நரகமாகும் ஒப்பி ஓம்புமிடம் சொர்க்கமாகும் என்பது திருவிக அவர்களின் கூற்று. பெண்ணின் பெருமையை போற்றாத சமயம் இவ்வுலகில் எங்கும் இல்லை எனலாம். சக்தி பெண் தெய்வமாவாள். தீமையை அளித்து நன்மை நிலவச் செய்பவள் சக்தி. வாணி கலைகளுக்குரிய தெய்வமாகப் போற்றப்படுபவள். கொற்றவை வெற்றி தெய்வம் அவர்கள் பெண்மைக்குரிய தெய்வங்கள். இத்தகைய தெய்வங்களைச் சமயச் சான்றோர்கள் பலவாறு பாடிப் புகழ்ந்துள்ளார்கள். காலம் காலமாகப் பெண்களுக்குரிய சமத்துவமும் மதிப்பும் வழங்கி வருவதில் தமிழ் சமூகம் நிகரற்றது. அவ்வை போன்ற பெண்பாற்புலவர்கள் சங்க காலம் தொடங்கி பிற்காலம் வரை தங்கள் அறிவு கூர்மையால் அரசர்களுக்கு அறிவு வழங்கியும் புலமையால் புரவலர்களால் போற்றப்பட்டும் சமுதாய நலன் கருதி தங்கள் படைப்புக்களை நல்கியும் சமுதாயத்தை நல்வழிப்படுத்தி வந்துள்ளனர். அதுபோன்றே பக்தி இலக்கிய காலத்திலும் பல பெண்கள் நுண்ணறிவும் இரைப்பற்றும் கொண்டு தங்கள் சமயம் சார்ந்த கருத்துக்களை நன்முறையில் எடுத்தியம்பியும் இறைவனைப் போற்றிப் பாடியும், இறைவனால் ஆட்கொள்ளப்பட்டும் சமையக் கொள்கைகளைச் செவ்வனே எடுத்தியம்பியும் வந்துள்ளனர். அவ்வகையில் பக்தி இலக்கிய காலத்தில் தோன்றிய சமயப் பெண்டிர் குறித்தும் அன்றைய காலகட்டச் சமுதாயச் சூழல் குறித்தும் இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.*

## பெண்மையின் மேன்மை

*ஒரு சமுதாயத்தின் தரம் உயர்வதும் தாழ்வதும் அச்சமுதாயத்தில் வாழ்கின்ற பெண்களுக்கு வழங்கப்படும் நிலையைப் பொறுத்ததாக அமையும். ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைப் பற்றிக் கூற வேண்டுமானால் அச்சமுதாயத்தின் பெண்களைப் பற்றி கூறுதல் அவசியம். "ஒரு சமுதாயம் பெண்களுக்கு எந்த அளவுக்கு உரிமைகள் கொடுத்திருக்கின்றது என்பதன் அடிப்படையில் அச்சமுதாயத்தின் தன்மையையும் மேன்மையையும் அளவிடலாம் என்று கருதுவர்."1*

*சங்க காலத்தில் தமிழ் சமுதாயத்தில் பெண்கள் உயர்வு உடையவர்களாகவும், புகழத் தக்கவர்களாகவும், தொழத்தக்க சிறப்பு வாய்ந்தவர்களாகவும், உரிமைகள் நிறைந்தவர்களாகவும் வாழ்ந்துள்ளனர் என்பதைச் சங்க இலக்கியம் கொண்டு அறிய முடிகிறது. அதேபோல் பக்தி இயக்கக் காலத்தில் சான்றோர்கள் பெண்களுக்குச் சம அந்தஸ்து வழங்கி இறைவனின் முன்னர் அனைவரும் சமம் என்ற சிந்தனையைச் சமுதாயத்தில் கால் கொள்ளச் செய்தனர். பக்தி இயக்கத்தின் விளைவாகப் பெண்கள் சமுதாயம் உயர்வடைந்த நிலையைப் பக்தி இலக்கியங்கள் கொண்டு தெளிவாக அறிய முடிகிறது.*

*அடியார்களின் வரலாறு கூறப்பெறும் இடங்களில் அவர்களது மனைவியர் மிக உயர்வாகக் கூறப்படுகின்றனர். குங்கிலியக்கலைய நாயனாரின் மனைவி "திருவினும் நல்லார்"2 என்றும், நமிநந்தியடிகளின் மனைவியார் தருமம்புரிமனையார்"3 என்றும் போற்றப்பட்டுள்ளனர். மேலும் திருவனையார் என்று திலகவதியார் போற்றப்படுகிறார். இதுபோன்று பல பெண்கள் பத்து இலக்கியத்தில் பல இடங்களில் பெருமை பேசப்படுகின்றனர். மங்கையர்கரசி யாரை சோழர் பெருமான் மங்கலமாகப் பெற்றெடுத்த செல்வம் பொருந்திய மாதேவி என்றும் தென்னர் குலப் பழி தீர்த்த தெய்வப்பாவை என்றும் போற்றப்படுகிறார். இதுபோன்ற இன்னும் பல பெண்கள் பற்றிய பெருமை கூறும் செய்திகளைப் பக்தி காலத்தில் அறிய முடிவதிலிருந்து பெண்களின் செயல்களுக்கு முழு மதிப்பு கொடுத்திருந்ததை*

அறிய முடிகிறது. அடியார்களின் வரலாறு கூறும் பெரிய புராணத்தில் 24 பெண்கள் வரலாறுகள் கூறப்படுகின்றன. இவர்களுள் இசைஞானியார், காரைக்கால் அம்மையார், மங்கையர்க்கரசியார் போன்றோர் தனியடியார்களாக வைத்துப் போற்றப்பெறும் பிறப்பு உடையவர்களாக உள்ளனர். இவையெல்லாம் பக்தி இயக்கத்தின் காலத்தில் பெண்களின் பெருமையைப் பறைசாற்றும் விதமாய் அமைந்துள்ளது அறிய முடிகிறது.

**பக்தி இயக்க காலத்தில் பெண்களின் சம உரிமைகள்**

பெண்கள் பக்தி இயக்க காலத்தில் தாங்கள் விரும்பிய சமங்களை உரிமையுடன் மேற்கொண்டு ஒழுகுவதற்கு உரிய சமுதாயமாகப் பக்தி இயக்கக் காலம் விளங்கியது. சோழ மன்னனின் மகளான மங்கையர்கரசியார் சைவ நெறியில் தலைசிறந்து விளங்கினார். கணவனாகிய பாண்டிய மன்னன் கூன் பாண்டியன் எவ்விதத் தடையும் விதிக்கவில்லை. இல்லற வாழ்க்கையில் மன வேறுபாடு இன்றி வாழ்ந்துள்ளனர். மகளிர் தான் விரும்பிய சமய நெறியைப் பின்பற்றுவதற்கு உரிமை பெற்றிருந்ததை அறிய முடிகிறது. அதுமட்டுமன்றி, இறைவனை வழிபடுவதற்கு ஆடவர்களுடன் பெண்கள் கூட்டமாகச் சென்று உரிமையுடன் வழிபட்டுள்ளனர். "நெருங்கிய மாதர்களும் ஆடவர்களும் சென்று வணங்கும் ஆவூர் பசுபதி"4 என்றும், சூடகமணிந்த முன் கையினை உடைய மகளிர் தம் துணைவருடன் சென்றதும் ஆடகமாடம். "தூவின் என்று வணங்கும் பல்லவனீச்சரம்."5 என்றும், கூறப்படுவதில் இருந்து பெண்கள் ஆடவர்க்கு இணையாகும் இறைவனை வழிபடுவதில் பொறுமை பெற்றிருந்தனர் என்பதை அறிய முடிகிறது.

அதுமட்டுமின்றி வைதிக அந்தணர்கள் நடத்தும் வேள்விகளிலும் பெண்கள் பங்காற்றும் உரிமை கொண்டிருந்தனர். சம்பந்தரின் திருமண நிகழ்ச்சியில் வேள்வி செந்தீயினைத் தத்தம் துணைவியருடன் மறையோர்கள் நடத்தியமை சுட்டப் பெறுகின்றது."6 சமய நிகழ்வுகள் மட்டுமின்றி பொது நிகழ்வுகளிலும் பெண்கள் சம உரிமையுடன் பங்கு கொண்டிருந்தனர் திருஞானசம்பந்த பெருமான் திருவீதியில் வரும்போது பெண்கள் மாளிகைகளின் மேல் நின்று சுண்ணம், பொரி போன்றவற்றைத் தூவியும், நிறைகுடம், விளக்கு போன்றவற்றை ஏந்தியும் ஆடவர்களுடன் கூடி நின்று போற்றியும், மங்கள வாழ்த்துப் பாடல்களைப் பாடியும் வரவேற்றனர்."7 பெரியோர்களை வரவேற்றறல், திருவிழாக்கள், திருமண நிகழ்ச்சிகள் போன்ற பொது நிகழ்ச்சிகளில் ஆண்டவர்களுடன் கலந்து செயலாற்றும் உரிமையைப் பெண்கள் பெற்றிருந்தனர். வெளியில் செல்வதற்கும் பெண்கள் எவ்வித கட்டுப்பாடும் அச்சமும் இன்றித் தம் தோழியருடன் நகர வீதிகளில் செல்லுதல், விளையாடுதல், கடல், ஆறு, குளம் போன்றவற்றில் நீராடுதல் போன்ற உரிமைகளுடன் திகழ்ந்துள்ளனர்."8

மற்ற உரிமைகளைப் போலவே பெண்கள் சொத்துரிமையும் பக்தி இயக்க காலத்தில் பெற்றிருந்தனர். "சிவனேசர் தன்மகள் பூம்பாவை மணந்து கொள்பவர் தன்னுடைய செல்வங்கள் அனைத்திற்கும் உரிமையுடையவர் என அறிவித்திருந்தார்."9 சிவனேசரின் அறிவிப்பு தந்தையின் கடமைகளில் பெண் குழந்தைகளுக்குச் சொத்துரிமையில் சம உரிமை இருந்ததை அறிய முடிகிறது பெண்கள் சொத்துரிமை பெற்றமையை விட்டுச் செய்திகள் சில சொட்டுகின்றன. "பல்லவர் காலத் தமிழ் சமுதாயத்தில் பெண்கள் சொத்துரிமை பெற்றிருந்தமையையும், பெண்கள் தம் உடைமையிலிருந்து கொடைகள் பல கொடுத்துள்ளமையையும் அறிகின்றோம்."10 செய்திகளில் இருந்து பெண்கள் தம் தந்தையின் உடைமைகளிலும் கணவனின் உடைமைகளிலும் பங்கு கொள்ளும் சம உரிமை பெற்றிருந்தனர். அதோடு பெண்கள் கலைகள் கற்பதற்கும் முன்னுரிமை கொடுக்கப்பட்டது. ஆடல் பாடல்களில் மேம்பட்டு விளங்கியுள்ளனர் கோயிலை சார்ந்த மடங்களுக்குச் சென்று சமய கல்வி கற்று வந்ததோடு சமய கருத்துக்களைப் பரப்பும் செயலையும் செய்து வந்துள்ளனர்.

**சமய இயக்கக் காலத்தில் காலத்தில் பெண்களின் கற்பு நெறி**

பெண்கள் கற்புடன் வாழ வேண்டும் என்பது காலங்காலமாய் வலியுறுத்தப்பட்ட ஒன்றாகும். கணவரிடம் எந்தச் சூழ்நிலையிலும் பொய் கூறாத கைவரும் கற்பு நெறியுடன் வாழ வேண்டும் என அறிவுறுத்தப் பெற்றனர்."காரைக்கால் அம்மையார் தன் கணவன் தன்னை விட்டுப் பிரிந்து சென்ற பின்னரும் கூட மன்னிய கற்பிணொடு மனையறம் புரிந்து வருகின்றார்."11 கணவனுக்காகத் தாங்கிய வனப்பு நிறைந்த தசைப்பொதி உடம்பைக் கழித்திங்கு உன் பால் அங்கு நின் தாள் போற்றும் பேய் வடிவை அடியேனுக்கு அருள வேண்டும் என இறைவனிடம் வேண்டினார்.

''ஈங்கிவன் குறித்த கொள்கையிது; வினி யிவனுக் காகத்
தாங்கிய வனப்பு நின்ற தசைப்பொதி கழித்திங், குன்பால்
ஆங்குநின் றாள்கள் போற்றும் பேய்வடி வடியே னுக்குப்
பாங்குற வேண்டு'' மென்று பரமர்தாள் பரவி நின்றார்''. 12

என்று கணவனுக்காக காத்திருந்த தன் கற்பு நெறி தாங்கிய உடலை விடுத்து பற்றி இல்லாத பேய் வடிவம் வேண்டி பெற்றுக்கொள்கிறார். கணவனைத் தவிர வேறு ஆடவர்கள் தன் உடலை ஏறெடுத்தும் பார்க்கக் கூடாது என்பது அன்றைய பெண்களின் கொள்கையாய் இருந்தது. ஆனால் காரைக்கால்

*அம்மையாரின் கணவரும் வேறு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு மகிழ்வுடன் வாழ்வதாகக் குறிப்பிடப்படுவதிலிருந்து ஆண்களுக்கு எந்த கட்டுப்பாடுகள் விதைக்கப்படவில்லை என்பதை அறிய முடிகிறது.*

*அதேபோல் கற்பு நெறியுடன் வாழும் பெண்களுக்குத் தீங்கு செய்பவர் விரைவில் அழிந்தொழிவர் என்ற கருத்தும் சமுதாயத்தில் நிலவி இருந்தது. திருமூலர் திருமந்திரத்திலும் இத்தகைய கருத்து இடம் பெற்றுள்ளது*

"பத்தினி பக்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தம் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அர்த்தமும் ஆவியும் ஆண்டொன்றில் மாண்டிருள்
சத்தியம் இது சதானந்தி ஆனையே"."13 (திருமந்திரம்–532)

*என்று திருமூல நாயனார் தன் திருமந்திரத்தில் குறிப்பிடுவதிலிருந்து கற்புடைய மகளுக்கு இடர் விளைவிக்கக் கூடாது என்பது கொள்கையாய் இருந்தது.*

**முடிவு**

*ஒரு சமுதாயத்தின் மேன்மையையும் பண்பாட்டையும் அச்சமுதாயம் பெண்களுக்கு கொடுக்கும் உயர்வின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. பக்தி இயக்க காலத்திய சமுதாயம் பெண்களை உயர்வாக போற்றி தாம் விரும்பிய சமய நெறிகளை மேற்கொள்வதற்கும் இறைவழிபாடுகளில் ஆண்களுக்கு நிகராக பங்கு கொள்வதற்கும் பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்கும் தாங்கள் விரும்பிய வண்ணம் வெளியில் செல்வதற்கும் முழு உரிமை உடையவர்களாகவே வாழ்ந்துள்ளனர்கள். மேலும் தந்தையின் உடைமைகளிலும் கணவனின் உடைமைகளிலும் முழு உரிமை பெண்களுக்கு உரியதாக இருந்தது கலைகள் கற்கும் உரிமையும் முழுமையாக இருந்தது சிற்சில உரிமைககளில் மட்டும் கட்டுப்பாடு இருந்து பாதிப்பிற்குள்ளான நிலையைக் காண முடிகிறது.*

**அடிக்குறிப்பு**

1. எஸ். வையாபுரி பிள்ளை, புறநானூறு தமிழரும்.பக்.53
2. சேக்கிழார் பெரியபுராணம், குங்கிய கலையர்,பா.21
3. "மேலது. நமிநந்தி அடிகள்,பா.23
4. "மேலது திருமங்கை ஆழ்வார், பா.1:2:15::9:3–4
5. "மேலது"
6. சேக்கிழார் பெரியபுராணம், திருஞானசம்பந்தர் புராணம், பா.10
7. "மேலது"
8. மேலது.பா.1049
9. "மேலது"
10. C. Meenakshi, administrative and social life under the pallavas, p.186
11. முனைவர் தா. ஈஸ்வரப் பிள்ளை, பக்தி இலக்கியத்தில் சமுதாயம் பார்வை, பக்.228
12. திருத்தொண்டர் புராணம்.பா.1765
13. திருமூலர் திருமந்திரம், பா.532
14. திருத்தொண்டர் புராணம், திருஞானசம்பந்தர்.பா.1053

**துணை நூற் பட்டியல்**


1. சேக்கிழார் . புராணம் பதிப்பாளர் கோயமுத்தூர் : கோவைத் தமிழ்ச் சங்கம் , 1964 தொடர் தலைப்பு. கோவைத் தமிழ்ச்சங்க வெளியீடு 12
2. திருமூலர், திருமந்திரம் . Publisher: Uma Pathippagam, Chennai.Language: Tamil .Edition: 2022
3. முனைவர் தா. ஈசுவரபிள்ளை பக்தி இலக்கியத்தில் சமுதாயப் பார்வை, தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்